உ
மகாகணபதி துணை

நெஞ்சறி விளக்கக் கண்ணிகள்

(இந்துமத ரகசியப் பொக்கிஷம்)



நூலாசிரியர் :
கோயிலூர் மரபு
பிரம்மஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள்
198, சாத்தார வீதி, ஸ்ரீரங்கம்.
திருச்சி-6.

விலை ரூ. 2

நெஞ்சறி விளக்கக் கண்ணிகள்

உ

முன்னுரை

உலகின்கண் மக்களாகப் பிறந்த எல்லோரும் பகுத்தறிவைக்கொண்டு உள்ளதை உள்ளபடி அறிந்து வாழவேண்டும் இல்லையேல் பாம்பைப் பழுதையென்றெடுத்து உயிரிழந்தது போலாகும். கனவுபோன்ற வாழ்வை நிசமென்று அணுகுண்டு போட்டு அரசாள நினைப்பதும் சாண்வயிறு வளர்ப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. உலக சுகங்களை கானலை நீரென்று தேடினவர்போல் தேடி மாண்டார்களேயன்றி வாழ்ந்தவருண்டா இல்லை. அதனால் கடவுள் ஏகநாயகன் ஒருவனே. மனமாகிய சக்தியால் உலகமாக விளங்கிக்கொண்டிருக்கிறான். அம்மனோசக்தியை தவிர வேறொரு பொருளில்லை என்பதை உணர்ந்த ஞானிகள் கவலையில்லாமல் சர்வதுக்க நிவர்த்திப் பரமானந்தப் பிராப்தியை யடைந்து இருக்கின்றார்கள். அதனால் மனதிற்கு வேறாக பந்தமோ மோட்சமோ இல்லையென்பதை யுணர்ந்து அம்மனத்திற்கு நல்ல விவேகத்தை உண்டுபண்ணுவதே மனிதமுயற்சியாகும். இவ்வுண்மையை உணராதவன் புருஷனாகமாட்டான். பெண்களாயினும் இவ் உண்மையை உணர்ந்து விவேகத்தை அடைந்தால் புருஷார்த்தத்தை அடைவார்கள் என்பதனால் இந்த நெஞ்சறிவு விளக்கக் கண்ணிகளாகிய நூலை வெளியிடுகின்றோம். பெங்களூர் பத்மநாப செட்டியார் அவர்களுக்கு குடகு சிவபுரி ஆஸ்ரமத்தில் கைவல்ய நவநீதம் பாடம் சொல்லும்போது உதாரணமாக 'எண்ணிப் பலகாலம் என்ன பயன் நீயடைந்தாய் எண்ணாமல் கொஞ்சம் இருந்துபார்நெஞ்சகமே' என்ற கவியைச் சொல்லி விளக்கியபோது, கேட்ட அவர் மனம் உவந்து 500 ரூபாய் கொடுத்து அச்சிடும்படி கேட்டுக்கொண்டார். இவர்கள் இம்மை மறுமை பயனும் முடிவில் மோட்சமும் அடையும்படி பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
பிரமானந்தம்
வேணும் சற்குருநாதன் துணை

சிறப்புப்பாயிரம்

தாரணி போற்றும் சனாதன தர்மம்
பூரணப் பொலிவுடன் பொன்றாதொளிர்ந்திடும்
ஓதரும் சிறப்புடன் உலகைக் கவர்ந்த
வேதம் நான்கும் விரிகடல் போன்றவை
நண்ணும் வாழ்வின் நலங்களை ஆயும்
எண்ணில் சாஸ்திரம் இமயமாய் உயர்ந்தவை
நன்னெறி ஸ்மிருதிகள் நாட்டும் வழிகளே
முன்னும் பின்னும் முரண்போ லுள்ளவை
உன்னத உண்மையின் உருவ மாகியப்
பொன்னை மிளிரும் புராணமோ மயக்கும்
ஈடிலாச் சான்றோர் இயற்றி யளித்த
பாடியங்களோ பண்டிதர்க் கேயாம்
எத்தனை தெய்வம் எத்தனை வடிவம்
எத்தனை கோவில் எத்தனை நெறிகள்
இங்ஙனம் விரிந்த இந்து மதத்தை
எங்ஙனம் உணர்வதென் றெண்ணித் திகைக்கையில்
இந்து மதத்தின் இரகசிய மெல்லாம்
செந்துறை வெள்ளைச் சிறப்புறு கண்ணிகள்
செஞ்சொலாற் பயின்று தேனிகர் சுவையொடு
நெஞ்சறி விளக்கம் நிலைத்த பெயருடன்
மக்கட் கெல்லாம் மகோப காரமாய்
மிக்க அருளால் விரும்பி அளித்தனர்
பண்டித ரோடு பாமரர் போற்ற
தண்டமிழ் மாலைகள் பற்பல தந்தவர்
கோவிலூர் மரபினில் குளிரொளி பரப்பி
மேவிய ஞானம் விளக்கென விளங்கிய
வீர சேகர ஞான வித்தகர்
சீரடி பரவி சிறப்புறத் திகழ்ந்த
நல்ல பொன்னம்பல ஞான தேசிகர்
மெல்லடி பற்றி மேதையாய் ஒளிரும்

அருளுரு :
அருளுரு பிரமானந்தர் அவர்தம்
திருவடி சார்ந்தோர் திருவெலாம் பெறுவரே.

இயற்றியவர்
சக்திசரண்
ஸ்ரீரங்கம்.

உ

ஸ்ரீ ராமஜெயம்

மகா கணபதியே நம:

நெஞ்சறி விளக்கக் கண்ணிகள்

திருமா மறையனைத்தும் தேர்ந்துநிதம் வாழ்த்துகின்ற
பெருமானைப் போற்றிநிதம் பேறடைவாய் நெஞ்சகமே. 1

நீதி தெரிந்துணர்ந்து நேர்நெறியில் நின்றவரே
ஆதிபரமேசன் அருள் பெறுவார் நெஞ்சகமே. 2

அண்டங்கள் கோடி அடிபணிந்து நின்றாலும்
பிண்டம் அழிவதெனும் பேறறிவாய் நெஞ்சகமே. 3

வீரன் புலனைந்தும் வென்றுள் மனமடங்கத்
தீரன் பரம்பொருளைச் சேர்ந்திருப்பான் நெஞ்சகமே. 4

பாபம் ஒழித்தருளாற் பண்ணுகின்ற புண்ணியத்தால்
தாபம் ஒழித்தீசன் தாளடைவாய் நெஞ்சகமே. 5

அஞ்ஞான ஏழ்பூமி யானதுயர் எண்ணாமல்
மெய்ஞ்ஞான ஏழ்பூமி விட்டனையே நெஞ்சகமே. 6

நீத்தார் பெருமைதனை நின்றறிந்த வள்ளுவனார்
கோத்தணிந்த வாசகத்தைக் கூர்ந்தறிவாய் நெஞ்சகமே. 7

மூவுலகம் போற்ற முடிகவித்து வாழ்ந்தாலும்
சாவுபிறப் பின்றித் தடுப்பதுண்டோ நெஞ்சகமே. 8

அல்லி குவிந்து அருந்தாமரை விரிய
எல்லி யுதித்ததுபோல் இன்பமுருய் நெஞ்சகமே. 9

பன்னிரண்டு மெய்ச்சமயம் பாராப் பரம்பொருளை
தன்னுருவாய் பெற்றிருந்தும் தயங்கினையே நெஞ்சகமே. 10

தீராத இன்பந் தெவிட்டாத பேரமுதாய்ப்
பேராத தன்னுருவாய் பெற்றறியாய் நெஞ்சகமே. 11

எண்ணிப் பலகாலம் ஏங்கி யழுதாலும்
புண்ணியத்தால் அன்றி பொருள்வருமோ நெஞ்சகமே. 12

அஞ்ஞானக் காரிருளில் ஐம்புலனாம் கள்ளரைநீ
மெய்ஞ்ஞான வாளெடுத்து வீசினையோ நெஞ்சகமே. 13

ஊரார் சதமென்றும் உற்றார் துணையென்றும்
தேரா மதியாற் றியங்கினையே நெஞ்சகமே. 14

கோடி பலதேடி கொடிமரமே நாட்டிவைத்தும்
ஓடியுயிர் போகுமெனில் உற்ருரார் நெஞ்சகமே. 15

ஞானக் கதிரோன் நடுப்பகலாய் நின்றதற்பின்
ஊனக்கண் மாற்ற வுறுதியுண்டோ நெஞ்சகமே. 16

பொறியரவின் தீவிடத்தாற் பொன்றுவது ஓருடம்பே
பொறிவிடமோ பல்பிறப்பை பொன்றவைக்கும் நெஞ்சகமே.

போர்முனையில் வீரன் பொடியாக்கும் தன்மையென
நேர்முனையில் அஞ்ஞனுயிர் நீறாக்காய் நெஞ்சகமே. 18

சிங்கம் மதகரியைத் தேடிப் புசிப்பதல்லால்
பங்கமுறத் தேரையைப்போய் பற்றுமோ நெஞ்சகமே. 19

ஐந்துதலைப் பாம்பை யடிக்கழுத்தை வெட்டினற்போல்
ஐந்துபுலன் ஆசை அறுத்தெறிவாய் நெஞ்சகமே. 20

நல்லோர்கள் கூட்டமுண்டேல் ஞானத்தால் வீடுதரும்
பொல்லாத கூட்டமுண்டேல் பொய்நரகாம் நெஞ்சகமே. 21

மூலமென்ற யானைதன்னை முன்தோன்றிக் காத்தவனை
ஓலமிட்டுக் கூவிநிதம் உய்ந்திலையே நெஞ்சகமே. 22

முப்புரத்தை நீறாக்கி மூவரதில் வாழவைத்தான்
ஒப்புரைக்க ஈசனருள் உண்டாமோ நெஞ்சகமே. 23

பிச்சையேற் றுண்டால் பிறப்பொழியு மென்றுணர்ந்த
அச்சமற ஈசன்முன் ஐயமுண்டான் நெஞ்சகமே. 24

அகமகமென் றெவ்வுயிர்க்கும் ஆன்மாவா நின்றிலங்குச்
சுகமளிக்கு மெய்ப்பொருளைச் சோர்ந்தறியாய் நெஞ்சகமே. 25

எட்டுதிக்கும் சூழ்ந்திருக்கும் ஈசனைநீ யாய்ந்தறியாய்
சுட்டறிந்தாய்ப் பொய்ப்பொருளைத் துன்பமுற்ருய் நெஞ்சகமே.

கலித்துயரை நீக்கக் கடவுளே சங்கரனய்
ஒலித்துமறை மெய்ப்பொருளின் உண்மைசொன்னன்
நெஞ்சகமே. 27

அன்புயர்வே யென்றரங்கன் ஐயன்தோள் மேலேற்றி
நம்புதிருப் பாணர் நலமளித்தான் நெஞ்சகமே. 28
கருமமிழி வில்லையெனக் காட்டுதற்காய் அர்ச்சுனர்க்கு
தருமப் பெருமானே சாரதியாம் நெஞ்சகமே. 29
கன்மபலன் விட்டுக்கதி பெறவே கீதையினல்
நன்மைதரக் கண்ணன்நல முறைத்தான் நெஞ்சகமே. 30
அத்துவிதம் உண்மையென ஆய்ந்தலரோன் கீதையினல்
சித்தமுறத் தேவர்கட்குத் தேர்ந்துரைத்தான் நெஞ்சகமே. 31
வாக்குமனம் எட்டாத வான்பொருளை நான்மறைகள்
நீக்கமற எப்பொழுதும் நீயென்னும் நெஞ்சகமே. 32
முத்தியென்று சொல்வார்கள் முப்பொருளும் வேறெனவே
கத்திப்பல் காலும் கதியிழந்தார் நெஞ்சகமே. 33
ஆற்றைக் கடந்து பத்தாய் ஆய்ந்தறியார் நிற்பதுபோல்
ஊற்றெடுக்கும் ஆனந்தம் உள்ளறியார் நெஞ்சகமே. 34
கயிரறியார் பாம்பெனவே கண்டவர்கள் ஓடுதல்போல்
உயிரறியார் இவ்வுலகை யுண்மையென்றார் நெஞ்சகமே. 35
ஆக்கம் அழிவதெல்லாம் ஆனபடி யானுலும்
நீக்கமற மேலோர் நிலைத்திருப்பார் நெஞ்சகமே. 36
மூவாசை நீருக்கி முத்திபெற்றார் சந்நிதியில்
நீவாசம் பண்ண நினைத்திலையே நெஞ்சகமே. 37
ஆசை யெமனாகும்ஆயாதார் போய் மடிந்தார்
ஆசை யழித்தால் அமருலகாம் நெஞ்சகமே. 38
துன்பம் ஒருகோடி துய்த்தாலும் மெய்யுணர்ந்தார்
இன்பமே வீடாய் இனிதிருப்பார் நெஞ்சகமே. 39
தன்னை யறிந்தால் தலைவனே நீயாவாய்
என்னும் பழமறையை ஏற்றிலையே நெஞ்சகமே. 40
வேடத்தால் போய்நடிப்போர் விட்டொழியார் தஞ்செயலை
வேடம் புனைந்தபயன் வேறறியேன் நெஞ்சகமே. 41
காதல் ஒழியாதோ கருவறையும் நீங்காதோ
சாதல் ஒழியாதோ சாற்றுவையோ நெஞ்சகமே. 42
மாயைமன வாக்கால் மதித்தறியாப் பொய்ப்பொருளாம்
சாயையெனக் கண்டும் சலிப்பதென்னே நெஞ்சகமே. 43

தேவர்முதல் பல்பிறப்பிற் சென்றலைந்தாய் பல்காலம்
ஆவல் அழியாத தாச்சரியம் நெஞ்சகமே. 44

சமயப் பெரும்பூசல் சாஸ்திரத்தில் உள்ளதல்ல
சமயத்தார் தாம்பிழைக்கும் தந்திரங்காண் நெஞ்சகமே. 45

சமயப் பெருஞ்சுழலில் சாயாமுன் பேரருளால்
சமயம் தெரிந்தெடுப்பான் சற்குரவன் நெஞ்சகமே. 46

பலகோடி பொன்பொருளை பட்டினத்தார் விட்டொழித்து
உலகனைத்தும் பொய்யென்றே யுண்மைபெற்றார் நெஞ்சகமே.

பெண்ணாசை விட்டுப் பெருந்தவத்தோர் தாயுமானார்
மண்ணாசை விட்டொழித்து வானடைந்தார் நெஞ்சகமே. 48

அட்டமா சித்தியெல்லாம் ஆய்ந்தறிந்து பெற்றாலும்
சுட்டறியா மெய்ப்பொருளைத் தோய்வதுண்டோ நெஞ்சகமே.

காக்கை வளர்த்தோடும் கருங்குயிலின் குஞ்சைப்போல்
ஊக்கமுடன் ஊர்வெறுத்து ஓடுவயோ நெஞ்சகமே. 50

நினைத்தபடி வாழ்வெனவே நேர்நெறியில் வாழ்ந்தார்கள்
நினைத்தபடி சென்றுன் நிலையிழந்தாய் நெஞ்சகமே. 51

வள்ளாளன் ஈசன் வகுத்தநெறி செல்லாமல்
சொல்லாளர் சொன்னவற்றில் சோர்ந்தலைந்தாய் நெஞ்சகமே.

போக்குவர வற்றிருக்கும் பூரணத்தைக் கண்டறிந்து
நீக்கமற நீயதுவாய் நிற்பதென்றோ நெஞ்சகமே. 53

கற்பார்கள் கோடிகடைப் பிடிப்பார் இல்லையெனில்
கற்பதனால் ஏதுபயன் கண்டறிவாய் நெஞ்சகமே. 54

வானிற்காற் றுண்டாம் வழிமுறைபோல் இவ்வுலகம்
கானிற்பேய்த் தேரெனவே கண்டறிவாய் நெஞ்சகமே. 55

ஆசையொரு கோடிவந்தும் ஆய்ந்துணர்ந்தோர் பற்றார்கள்
ஓசையுடன் வானிடித்தும் ஒட்டுமோ நெஞ்சகமே. 56

தாயாவ தீசனெனத் தான்போய் மகப்பேறுத்
தாயாகிக் காக்கும் தயவுடையான் நெஞ்சகமே. 57

குருந்தமரத் தீசன் குருவாய்ப் பெருந்துறையில்
இருந்தருள் மாணிக்கற் கெத்தவமோ நெஞ்சகமே. 58

சாதிப் படுகுழியில் சாயாமல் இப்பிறப்பில்
ஆதிப் பரம்பொருட்கே யாளாவாய் நெஞ்சகமே. 59

தேவர் பலகோடி திசைநான்கும் நின்றெதிர்த்து
மூவர் வந்தாலும் முனிந்தழிப்பாய் நெஞ்சகமே. 60

திசைபலவும் வென்றுன் திறமையினால் ஆண்டாலும்
அசைவதென்முன் என்பதனை யாய்ந்தறிவாய் நெஞ்சகமே. 61

பரவெளியாம் என்னிடத்தில் பல்லுயிர்கள் வாழ்ந்திருக்கும்
திரமுனதே யென்றறிந்தேன் தேர்ந்தறிவாய் நெஞ்சகமே. 62

யோகம் பலித்தவர்கள் ஓர்ந்திருப்ப தென்னிடத்தில்
மோகம் ஒழித்தடைய முந்திலையே நெஞ்சகமே. 63

சித்தசித்தும் ஈசன் திரிவிதமும் நீயிலையேல்
சுத்தபர பூரணத்தில் சொல்லவுண்டோ நெஞ்சமே. 64

முப்பொருளும் வேருகி முத்தியிலே யின்பமுற்ருல்
அப்பொருளும் பூரணம் ஆவதுண்டோ நெஞ்சமே. 65

லோபத் துரியோதனன் லோகத்தில் தீயவனாய்
பாபத்தால் தீநரகில் பட்டழிந்தான் நெஞ்சகமே. 66

காமத்தால் இராவணனே கையிலைமலை யெடுத்தான்
சேமத்தை முற்றொழித்துச் செத்தொழிந்தான் நெஞ்சகமே. 67

துவம்பதமும் தத்பதமும் சுத்தசுத்தம் கண்டறியார்
துவம்பதமே தற்பதமாம் சொல்லறியார் நெஞ்சகமே. 68

தெய்வமில்லை யென்பான் திருப்பதிக்குத் தீட்சைவைப்பான்
தெய்வத்தின் பேருளைத் தேர்ந்தறிவாய் நெஞ்சகமே. 69

தெய்வத்தை யுண்டென்பான் செங்கல் அமுதளிப்பான்
கைவித்தை காரணமாய்க் கண்டறிவாய் நெஞ்சகமே. 70

பாடுவான் எப்பொழுதும் பண்ணுவான் பூசைமிக
ஆடுவான் மக்கள்மனைக் காசையினால் நெஞ்சகமே. 71

தாரமுயிர் என்பார் தனையருயிர் தானென்பார்
சாரமென்ப தில்லையென்ருல் சாவடிப்பார் நெஞ்சகமே. 72

காலம் கலிகாலம் காமப் பெருநெருப்பால்
ஆலமென வெந்தெரிந்த தாய்ந்திலையோ நெஞ்சகமே. 73

இவ்வுலகும் எவ்வுலகும் இல்லா தழியுமென
எவ்வுயிர்க்கும் ஈசன்பால் இன்புறுவாய் நெஞ்சகமே. 74

அன்புமலரெடுத்து ஆய்ந்தறிவை பூசை செய்து
இன்பமய மாயிருப்ப தெக்காலம் நெஞ்சகமே. 75

கலியன் கொடுமைதனை கண்டறிந்த வானோர்கள்
ஒலியடங்கி வானிருத்தல் ஓர்ந்திலையோ நெஞ்சகமே. 76

அஞ்சாமல் ஈசன் அருளதனல் காப்பனென
நஞ்சான இவ்வுலகில் நாட்கழித்தோம் நெஞ்சகமே. 77

ஒழுக்கம் உயிர்தனிலும் ஓம்பென்றான் வள்ளுவன்முன்
இழுக்கென்ப திவ்வுடல் நானென்பதுவே நெஞ்சகமே. 78

மன்னுயிரைத் தன்னுயிர்போல் வாழவைத்துப் பேரருளால்
தன்னுயிராய் கண்டோன் தனியரசாம் நெஞ்சகமே. 79

ஆரியனும் தன்மை அறிவுருவே தானகி
சீரியனய் எவ்வுயிர்க்கும் தெய்வமாம் நெஞ்சகமே. 80

ஒருகோடி சூரியர்போல் உள்ளொளிரும் ஈசன்
இருகோடி நெஞ்சத்தார்க் கேதுமில்லை நெஞ்சகமே. 81

கற்பம் கணமாம் கணகாலம் கற்பமதாம்
சிற்பரத்தின் சந்நிதியில் செய்தனையே நெஞ்சகமே. 82

அத்துவித வாசலையும் ஆய்ந்தறியாப் பேதையர்பால்
பொய்த்துவிதம் என்றால் புரியுமோ நெஞ்சகமே. 83

அறுசமய வாதியர்கல் ஆனைகண்ட அந்தகர்போல்
உறுதியுடன் தம்தெய்வம் உண்மையென்ருர் நெஞ்சகமே. 84

காண்பானும் காட்சியையும் காண்பொருளும் கைப்பயனும்
காண்பவனே யானல் கதியதுவாம் ;நெஞ்சகமே. 85

நெற்றிக்கண் காட்டி நெடுந்திகிரி தான்சுழன்றும்
குற்றத்தைக் குற்றமென்பார் குற்றமற்றார் நெஞ்சகமே. 86

குடமனைத்தில் வானிருக்கும் கொள்கைபோல் ஆன்மாவும்
உடம்பனைத்தும் நிற்கும் ஒருவனும் நெஞ்சகமே. 87

ஆன்மாப் பலவாக ஆய்ந்தறிந்தார் தோடமதை
ஏன்மறந்தார் ஐம்பொறியின் இச்சையினல் நெஞ்சமே. 88

ஆன்மாவந் தர்யாமி ஆட்டுதலால் ஆடுகின்ருய்
ஆன்மாவைக் கண்டறியா தாடுகின்ற நெஞ்சகமே. 89

உடம்பழிந்தும் ஆன்மாவை உண்மைப் பரம்பொருளாய்
திடம்பெறவே கண்டால் சிவமாவாய் நெஞ்சகமே. 90

அஞ்ஞன் படையுடனே ஆயிரம் தூளாவான்
அஞ்சா தகம்பிரம்மம் ஆய்ந்துணர்வாய் நெஞ்சகமே. 91

சாக்கிரமும் சொப்பனமும் சற்றுமிதில் பேதமில்லை
நீக்கி அறிவாக நிலைபெறுவாய் நெஞ்சகமே. 92
நனவு கனவுறக்கம் ஞானியர்க்குப் பொய்யாகி
மனநினைவாய் சான்றாகி வாழ்ந்திருப்பார் நெஞ்சகமே. 93
அலையாக் கடலதுபோல் ஆடா விளக்கதுபோல்
நிலைபெறுவாய் வீடதுவே நித்தியமாம் நெஞ்சகமே. 94
இறைவனையே எண்ணிநிதம் ஏங்கியழும் மெய்யன்பர்
குறைவில்லா வீடடைவார் கூர்ந்தறிவாய் நெஞ்சகமே. 95
கருமத்தால் ஆம்பதங்கள் காலத்தால் நீங்குமெனும்,
தருமத்தைக் கண்டும் தயங்கினையே நெஞ்சகமே. 96
பொன்னை யுயிரழிக்கும் பொல்லாக் கொலைஞனென
தன்னையறிந் துணர்ந்தார் சாற்றினர்காண் நெஞ்சகமே. 97
பலபிறப்பிற் போய்ப்பிறந்தும் பல்தொழிலே செய்தாலும்
நலமருளும் ஈசன்ருள் நாடிநிற்பாய் நெஞ்சகமே. 98
உயிரிரக்கம் இல்லாமல் ஊனுண்டு உடல்வளர்த்தால்
கயிறிறுக்கக் காலன்வந்தால் காப்பவர்யார் நெஞ்சகமே. 99
எண்ணிப் பிறந்திறந்தாய் ஏழ்பிறப்பாம் ஆற்றினிடை
புண்ணியத்தால் மாந்தர் புகுங்கரையாம் நெஞ்சகமே. 100
அன்னைவயிற் றிற்றுயரம் ஆய்ந்தெழு மாதமதில்
உன்னைமறந் திங்கிருந்தாய் உய்வுண்டோ நெஞ்சகமே. 101
இன்புற்ருேம் என்றுள் இருமாந்த பேதையர்கள்
துன்புற்று மாய்ந்தழிந்தார் துன்மதியால் நெஞ்சகமே. 102
நித்தம் இறப்பவரை நேராகக் கண்டறிந்தும்
இத்தரையில் வாழ்வமென எண்ணினையே நெஞ்சகமே. 103
செத்தார்பாற் சென்றழுது சேர்ந்துநீர் ஆடியபின்
அத்தனைபேர் உண்பார் அவர்போவார் நெஞ்சகமே. 104
நல்லோர்க்குத் துன்பமுறில் நன்மையென ஆய்ந்திருப்பர்
பொல்லார்க்குத் துன்பமுறில் பொய்த்தழிவர் நெஞ்சகமே. 105
ஈசன் மறந்தானே என்வினைதான் மாற்றியதோ
பாசம் மறைத்ததுவோ பார்த்துரைப்பாய் நெஞ்சகமே. 106
புலன்வழியில் சென்றலைந்தாய் போனவழி நீதிரும்பாய்
நலனழிந்தாய் இவ்வுலகில் நாணமற்ற நெஞ்சகமே. 107

ஐம்புலனில் ஒன்றால் அழியுமேல் பல்லுயிர்கள்
ஐம்புலனும் சேர்ந்தழிவார் ஐயமுண்டோ நெஞ்சகமே. 108
ஆச்சரியம் இவ்வுடம்பில் ஆடுகின்ற வாயுவைமேல்
மூச்செறிந்து போகாமுன் முத்தியுறாய் நெஞ்சகமே. 109
பிச்சையேற் றுண்டாலும் பேரரசாய் வாழ்ந்தாலும்
அச்சமற மெய்ப்பொருளை ஆய்ந்திருப்பாய் நெஞ்சகமே. 110
செல்வமும் கல்வியுள்ளார் தேராச் சிறியரெனில்
நல்வினையை மாற்றி நரகடைவார் நெஞ்சகமே. 111
நன்றி மறவாதே நன்றென்பான் வள்ளுவன்முன்
நன்றியருள் நாதன் நலமறந்தாய் நெஞ்சகமே. 112
பெண்ணாசைக் கூற்றாம் பெருந்தீனி காலனுமாம்
எண்ணாத தூக்கம் எமன்தூதாம் நெஞ்சகமே. 113
காமக் குரோதாதி கள்ளர் ஒழிந்தாரோ
தாமதமும் ராஜதமும் தாழ்ந்ததுவோ நெஞ்சகமே. 114
பஞ்சம் தெளியாதோ பல்துயரம் நீங்காதோ
அஞ்சலென ஈசன் வந்தாளானோ நெஞ்சகமே. 115
பஞ்ச கோசத்தைவிட்டு பாழைவிட்டு மேல்துரியம்
அஞ்சாமல் தன்னுருவாய் ஆய்ந்திருப்பாய் நெஞ்சகமே. 116
நினைக்கத் தெரிந்ததுபோல் நீமறக்கக் கற்றிலையே
வினைத்துயர்போய் சான்றாய் விழித்திலையே நெஞ்சகமே. 117
அருவாம் உருவாம் அருவுருவாம் ஈசனருள்
உருவாகப் பெற்றிருந்தும் உய்ந்திலையே நெஞ்சகமே. 118
எங்கும் நிறைபொருளாய் எல்லையற்ற ஆனந்தம்
பொங்கிவரக் கண்டும் புசித்திலையே நெஞ்சகமே. 119
காலம் வருமளவும் காத்திருந்து ஞானியர்கள்
மூலம் தெரிந்துணர்ந்து மோகமற்றார் நெஞ்சகமே. 120
ஆனந்தப் பேரமுதை ஆய்ந்தறிந்த ஞானியர்கள்
மோனந் தனிலிருந்து முத்திபெற்றார் நெஞ்சகமே. 121
பேரின்ப வாசலிலே பேதமையை நீயொழித்து.
நேரிற்போய் இன்பமுற்று நிற்பதென்றோ நெஞ்சகமே. 122
தத்துவம் ஆறாறில் தானதுவாய் வேறாகி,
அத்துவிதப் பேரரசை ஆள்வதென்றோ நெஞ்சகமே. 123

நான்மறைகள் தேடிநிதம் நாடறியான் எம்பெருமான்
நான்மறந்தும் தான்மறவான் நானுனுன் நெஞ்சகமே. 124

எண்ணிப் பலகாலம் என்னபயன் நீயடைந்தாய்,
எண்ணுமல் கொஞ்சம் இருந்துபார் நெஞ்சகமே. 125

தம்பமுதல் நான்முகற்கும் சான்ருய் இருக்குமெனே
வம்படித்து நீயிருந்தால் வாழ்வாயோ நெஞ்சகமே. 126

பட்டப் பகலோ பகலிரவும் அற்றதுவோ
வெட்ட வெளிநிலவோ மேல்துரியம் நெஞ்சகமே. 127

கற்றுணர்ந்தோர் வாய்மை கதையாகிப் போகாமல்
உற்றுணர்ந்து மெய்ப்பொருள்கண் டுய்வாயோ நெஞ்சகமே.

சந்திரனில் மண்ணெடுத்தும் தான்பூமி சுற்றிவந்தும்
இந்திரனுய் வாழ்ந்தும் எமன்விடுமோ நெஞ்சகமே. 129

ஐம்புலனும் பாலைநிலத் தாயாதார் போய்மடிந்தார்
பைம்புனலாம் பேரின்பம் பார்த்தடைவாய் நெஞ்சகமே. 130

துரியப் பேரின்பமதில் தோய்ந்துநிதம் வாழாமல்
எரியும் பொறியனலில் எய்த்தனையே நெஞ்சகமே. 131

செய்த இருவினையால் சேர்ந்துவரும் இன்பதுன்பம்
எய்தவரும் துன்பத்தால் ஏங்குவதேன் நெஞ்சகமே. 132

பேரின்பத் தேன்பாயப் பெற்றிருந்தும் உண்ணுமல்
சேரின்பப் பன்றியைபோல் சீரிழந்தாய் நெஞ்சகமே. 133

காண முடியாமல் கைவிடவும் மாட்டாமல்
நாணமுற்றேன் ஈசனுக்கு நன்றிசொல்வாய் நெஞ்சகமே. 134

கன்னிப் பருவமதில் கண்கலந்த நாயகன்பால்
என்னிதயம் ஏங்குவதை என்றுரைப்பாய் நெஞ்சகமே. 135

அஞ்ஞான மூடுபனிக் காதித்தனும் துரியம்
மெய்ஞ்ஞானப் பேரரசை மேவுவையோ நெஞ்சகமே. 136

பேசாத மோனமுற்றுப் பேதமில்லா பேரின்பம்
கூசாமல் எப்போதும் கூடிநிற்பாய் நெஞ்சகமே. 137

இறைவன் பெருங்கருணை எண்ணியெண்ணி யின்பமுற்று
நிறைவாகி யிவ்வுலகில் நிற்பதென்ருே நெஞ்சகமே. 138

விருப்பற்ருல் மெய்ஞ்ஞானம் வீடுதரக் கண்டறிந்தும்
விருப்புற் றழிந்தார் விதிவசமோ நெஞ்சகமே. 139

கானக் கனல்மரத்தை காய்ந்ததுபோல் கன்மமெலாம்
ஞானக் கனலதனுல் நாசமுறும் நெஞ்சகமே. 140

வேதம் அவரவர்க்கும் வெவ்வேருய் கூறிடினும்
பேதமறக் கண்டவர்க்கே பேறளிக்கும் நெஞ்சகமே. 141

இன்பமுறப் பச்சைக்கு இருபுறம்செல் ஆவினைப்போல்
இன்பமுறப் பல்துறைபோய் எய்த்தனையே நெஞ்சகமே. 142

அழியாத பேரின்பத் தாழியலை வீசிவர
சுழியா தமர்ந்திருக்கச் சோர்ந்தனையே நெஞ்சகமே. 143

மூவர்தரும் கீதைதனை மோகமறக் கற்றவர்கள்
தேவர்முதல் மாந்தர் சிவமானார் நெஞ்சகமே. 144

பனைக்கடியில் பால்குடித்தும் பாலைக்கள் என்பார்கள்
வினைப்புலனாம் பேரின்பம் விடையமென்பார் நெஞ்சகமே. 145

தேவர் பெருமானே சீதையுடன் கான்புகுந்தால்
யாவர்தான் ஊழ்வினையை மாற்றவல்லார் நெஞ்சகமே. 146

நல்லமுதை நஞ்சாக்கும் நஞ்சை யமுதாக்கும்
வல்லமையுன் பாலிருத்தல் மாற்றிலையே நெஞ்சகமே. 147

முன்னை வினையொழித்து முப்பாழும் பாழாக்கி
என்னை யறிவாக்கும் எம்பெருமான் நெஞ்சகமே. 148

அக்கறைபோல் தோற்றும் அழியாத பேரின்பம்
இக்கறையாம் இச்சையற்ருல் இன்புருவாய் நெஞ்சகமே. 149

நினைத்தால் பலபிறப்பாம் நீமறந்தால் வீடாகும்
அனைத்துலகும் சென்றலைந்தாய் ஆனதென்னே நெஞ்சகமே.

உடம்பால் வருந்துயரை உன்னுருவாய் கண்டறிந்தேன்
படம்பிடித் தேன்என்னை படிகம்போல் நெஞ்சகமே. 151

மண்ணுடும் மன்னவரும் வானாடும் வானவரும்
கண்ணுடும் எப்பொருளும் கய்த்தொழியும் நெஞ்சகமே. 152

தன்னை யறியார் தலைவனுக்கு வேருகி
பின்னும் பிறந்திறப்பர் பேதமையால் நெஞ்சகமே. 153

எறும்புமுதல் யானைகடை ஏழ்பிறப்பாம் ஆற்றினிடை
துறும்புபோல் சுற்றிவந்தும் சோர்ந்திலையே நெஞ்சகமே. 154

மாப்பிள்ளைத் தோழன் மறுவீடு போனதுபோல்
காப்பில்லை யென்றறிந்தோ காய்ந்தனைநீ நெஞ்சகமே. 155

உன்னை யறியாமுன் உன்னுருவே நானுனேன்
என்னை யறிந்தபின்னர் என்னுருவாம் நெஞ்சகமே. 156
ஊழ்வினையை வெல்ல ஒருவரால் ஆவதுண்டோ
ஊழ்வினையே ஈசன் உருவதனுல் நெஞ்சகமே. 157
அரியாய் சிவமுதலாய் ஆண்டருளும் மெய்ப்பொருளை
தெரியாதார் வேருய்த் திகைத்தயர்ந்தார் நெஞ்சகமே. 158
முன்னம் பலபிறப்பில் மொத்துண்டு நீயலைந்தாய்
இன்னும் பிறந்திறக்க எண்ணுவயோ நெஞ்சகமே. 159
கங்கைநீர் ஆடிக் கடவுளைநீ போற்றிசெய்தால்
சங்கையற வந்தருள்வான் சற்குரவன் நெஞ்சகமே. 160
நினைவால் உலகாக்கி நித்தியத்தைப் பொய்யாக்கி
கனவுபோல் இவ்வுலகைக் காட்டுகின்ற நெஞ்சகமே. 161
என்னையறிந் தின்பமுற்றுள் ஏழ்பிறப்பை நீமாற்றி
உன்னையரு வுருவாய் ஓர்ந்தனையோ நெஞ்சகமே. 162
பந்தமுத்தி யுண்டென்று பல்விதமாய்க் கட்டிவிட்டார்
பந்தமுத்தி ஆன்மாவைப் பற்றுமோ நெஞ்சகமே. 163
ஆன்மாவைக் கண்டால் அழியுமிந்த சோகமென
நான்மறைகள் சொன்னவற்றை நன்கறிவாய் நெஞ்சகமே.
ஆன்மாவில் பந்தமுத்தி யாய்ந்தறியார் கற்பனையாம்
ஆன்மாவைக் கண்டால் அதுவீடாம் நெஞ்சகமே. 165
ஒத்துவரும் கன்மம் உடம்பால் இருவிதமாம்
வித்துமரம் போல விதிவசங்காண் நெஞ்சகமே. 166
கற்றறிந்த சாத்திரத்தால் காண்பதுண்டோ மெய்ப்பொருளைப்
பற்றறுத்தால் ஈசன் பதமடைவாய் நெஞ்சகமே. 167
ஆன்மாவைக் கண்ணன் அழியாத பூரணமாய்
தானதுவாய் கீதையினுல் சாற்றினர்காண் நெஞ்சகமே. 168
கடமுடைந்தால் வானெனவே கண்டயர்ந்த பேதையர்போல்
உடம்பழிந்தால் ஆன்மாவாய் ஓர்ந்தயர்வார் நெஞ்சகமே. 169
ஆன்மா பிரம்மமென ஆய்ந்துணர்ந்த ஞானியர்கள்
தான்பிரம் மானந்தமுற்ருர் சந்ததமும் நெஞ்சகமே. 170
உடம்பெல்லாம் வாயாக வுண்டாலும் பேரின்பம்
திடம்பெற்ருர்க் கென்றும் தெவிட்டாதாம் நெஞ்சகமே. 171

கருமபலன் ஈசன்றன் கைகொடுத்து வேதநெறி
கருமத்தைச் செய்தால் கதியடைவாய் நெஞ்சகமே. 172

கருமபலன் விட்டால் கரணசுத்தி யுண்டதனால்
ஒருமைதரும் ஞானத்தால் உண்மைகதி நெஞ்சகமே. 173

சச்சிதா னந்தமெனும் சாகரத்தைக் கண்டுணர்ந்தோர்
இச்சித்து வேறொன்றை எய்துவரோ நெஞ்சகமே. 174

சிற்றின்பம் பேரின்பம் தேராதார் வேறென்பர்
கற்றுணர்ந்தோர் தன்னுருவாய்க் கண்டிருப்பார் நெஞ்சகமே.

காயம் இருக்கும்வரை கன்மத்தால் துன்பமுண்டாம்
மாயமெனக் கண்டோர் மகிழ்ந்திருப்பார் நெஞ்சகமே. 176

கங்கைமுதற் தீர்த்தமோ காசிமுதல் ஏழ்புரியோ
எங்கள் பெருமான் இருக்குமிடம் நெஞ்சகமே. 177

எண்ணிப் பலகாலம் ஏமாந்து போனதல்லால்
உண்ணிறைந்த பூரணத்தை ஓர்ந்ததுண்டோ நெஞ்சகமே.178

வாய்மையரிச் சந்திரன்போல் வாழ்ந்தவரைக் கண்டிலையோ
வாய்மையை நீமறந்து வாழ்ந்தனையே நெஞ்சகமே. 179

நால்வர் தமிழ்க்காவோ நம்மாழ்வார் வாய்மொழியோ
நால்மறையோ அன்பருளோ நாதனிடம் நெஞ்சகமே. 180

தொழுதாடி நிற்பதல்லால் தோன்றாப் பரம்பொருளை
எழுகோடி மந்திரம்போய் எட்டுமோ நெஞ்சகமே. 181

கட்டமுதை யுண்ணாக் கயவர் சுமந்ததுபோல்
விட்டாய் பரம்பொருளை வேறெனவே நெஞ்சகமே. 182

தென்னைமரக் கள்குடித்து தேள்கடித்த வானரம்போல்
தன்னைமறந் தாடித் தவித்தனையே நெஞ்சகமே. 183

பரமபதம் போவதற்குப் பார்த்தேன் வழியெனக்கு
திரமனமாய் நீயிருந்தால் செல்லலாம் நெஞ்சகமே. 184

நாமரூப இவ்வுலகம் ஞானத்தால் பொய்யாகும்
இராமனருள் நாமாளும் இராச்சியமாம் நெஞ்சகமே. 185

உண்டாய் இருந்தால் உலகத்தார் சொந்தமென்பர்
கண்டார் பொருளிலையேல் கைவிடுவார் நெஞ்சகமே. 186

அடாஅத காரியத்தை அஞ்சாமற் செய்தவர்க்குப்
படாதஅத பாடுவரும் பார்த்தறிவாய் நெஞ்சகமே. 187

பழையன்னம் தந்தால் பசியாவரங் கொடுக்கும்
பிழையடியார் மெத்தவுண்டு பேசியறி நெஞ்சகமே. 188

ஈசனிடத் தன்பிருந்தால் எவ்விதத்தும் கைகொடுப்பான்
பாசமற என்றும் பதம்பணிவாய் நெஞ்சகமே. 189

சென்ற இடமெல்லாம் சிறந்திருக்க வேண்டுமெனில்
நின்றவுயிர் அத்தனைக்கும் நேர்மைசெய்வாய் நெஞ்சகமே. 190

வள்ளுவனுர் சொன்னகுறள் வாழ்ந்துமிகக் காட்டியதை
உள்ளபொருள் பேதையர்கள் ஓர்ந்தறியார் நெஞ்சகமே. 191

மதியை விதியாக்கும் மார்க்கண்டன் போலுலகில்
விதியெழுத்தை மாற்றி விழித்தெழுவாய் நெஞ்சகமே. 192

மதவெறியர் போல மயங்கி யலையாமல்
இதயப் பெருவெளியில் இன்புறுவாய் நெஞ்சகமே. 193

படித்துணர்ந்தார் செய்கை பரமன் திருவடியில்
வடித்திருப்பார் கண்ணீரை வாழ்ந்திருப்பார் நெஞ்சகமே. 194

முக்கரணச் செய்கையினுல் முற்றவரும் கன்மபலன்
சொர்க்க நரகமென்பார் சொப்பனம்போல் நெஞ்சகமே. 195

பாலர்பித்தர் பேயெனவே பற்றெழித்த ஞானியர்கள்
சீலமுள்ள பேரின்பம் சேர்ந்திருப்பார் நெஞ்சகமே. 196

முன்புணர்ந்த ஞானியர்கள் முக்குணத்தின் வேருகித்
துன்பமிலாப் பேரின்பம் தோய்ந்திருந்தார் நெஞ்சகமே. 197

காக்கைக்கண் சென்றுலகில் காண்பதிருபுறம் போல்
ஆக்கைவே ருன்மாவே ருய்ந்துணர்வாய் நெஞ்சகமே. 198

தாய்தந்தை ஈசன் சராசரமும் சற்குருவும்
ஆயென் துணையாய் அருவுருவாம் நெஞ்சகமே 199

முற்றுப்பெற்றது

•••○○•••

ஸ்ரீலஸ்ரீ சுந்தர சுவாமிகள் இயற்றிய சாற்றுக்கவி
சிரவணம்பட்டி (கோவை)

வெண்பா

நெஞ்சுக் கறிவுறுத்தும் நெஞ்சறி விளக்கமெனும்
அஞ்சொலால் தத்துவநூல் ஆக்கினார் — விஞ்சையெலாம்
கற்றபிர மானந்தர் காசினிக்கோர் மெய்ப்பொருளை
உற்றறியத் தந்தார் உகந்து.

வெளிவந்த நூல்கள்

1. பிரஹ்மகீதை மூலமும்
பிரஹ்மானந்த லகரி என்னும் உரையும்
2. அஞ்ஞவதைப்பரணி மூலமும்
அத்வைதானந்த விளக்கமென்னும் உரையும்
3. வேதாந்த சூடாமணி மூலமும்
பிரஹ்மானந்த விளக்கமென்னும் உரையும்
4. ஸ்ரீ ராமர் பிள்ளை தமிழ்
5. மருகல் மாலை
6. மருகலந்தாதி
7. சிக்கல் சிங்கார வேலவர் அந்தாதி வெண்பா
8. ஸ்ரீ அரங்கர் வெண்பா அந்தாதி
9. ஸ்ரீ அரங்கர் கட்டளைக் கலித்துறை அந்தாதி
10. ஸ்ரீ அரங்கத்து அநுபூதி
11. ஸ்ரீ அரங்கநாயகி அந்தாதி
12. நெஞ்சறி விளக்கக் கண்ணிகள்
13. அயோத்தி மாலை
14. திருச்செந்தில் அந்தாதி

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி-2. போன்: 25416.